Cr.Misc.39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF PRINCIPAL SESSIONS COURT, THANJAVUR

S.C.No.193/2025

Dated 26-11-2025
Deposition of witness for : PW 1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அந்தோணி அமல்ராஜ் | வயது | : | 42 |
| தந்தை பெயர் | : | வின்செண்ட் | தாலுக்கா | : | தஞ்சாவூர் |
| கிராமம் | : | தஞ்சாவூர் | தொழில் | : | தலைமை காவலர் |

Solemnly affirmed by Thiru.A.Ekambaram, Grade-1 Bench Clerk, of this court in accordance with the provisions of Act X of 1873.

**Accused present**

Ld. Defense **Counsel Present**

சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை:

1) நான் தற்போது திருவையாறு காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன்.

2) கடந்த 27.4.2024ம் தேதி மதியம் 12.30 மணிக்கு நான், 1368 காவலர் அசோக் மற்றும் காவல் ஆய்வாளர் சர்மிளா ஆகியோர்கள் தஞ்சாவூர் - அரியலூர் மெயின்ரோட்டில் கஸ்தூரிபாய் அருகில் சிவஞானம் வயலுக்கு அருகே ரோந்து சென்றுகொண்டிருக்கும்போது அங்கு ஆஜர் எதிரி கையில் கத்தி போன் வாளை வைத்துக்கொண்டு அங்கு போக வர மக்களை தேவடியா மகனே குச்சி காரி மகனே என்று திட்டிக்கொண்டும் இந்த ஊரிலே நான்தான் பெரிய ரவுடி என்று அங்கு போய்கொண்டிருக்கிற மக்களை மிரட்டிக்கொண்டும் என் மீது நிறைய வழக்கு இருக்கிறது என்று மிரட்டி கொண்டிருந்தார்.

3) அப்போது எங்களை பார்த்தவுடன் மேற்படி எதிரி எங்களையும் கையில் வைத்திருந்த வாளை காட்டி என்னை பிடித்தால் உங்களையும் கொன்றுவிடுவேன் என்று மிரட்டினார்.

4) உடனே நாங்கள் மேற்படி எதிரியை வளைத்து பிடித்து அவர் கையில் வைத்திருந்த என் முன்னிலையிலும் அசோக் முன்னிலையிலும் ஆய்வாளர் வாளை மகஜர் மூலம் கைப்பற்றினார். அந்த மகஜர் இதுதான். அது அ.சா.ஆ.1 ஆகும்.அந்தமகஜரில் நாங்கள் இருவரும் சாட்சி கையொப்பம் இட்டோம். என்னிடம் காட்டப்படும் வாள்தான் எதிரியிடம் இருந்து கைப்பற்றப்பட்டது ஆகும். அந்த வாள் சா.பொ.1 ஆகும்.

5) பின்பு எதிரியையும் கைப்பற்றப்பட்ட வாளுடன் நிலையம் வந்து நிலைய கு.எண்.244/2024 பிரிவு 294(b) 506(ii) IPC மற்றும் 3(1) of PPDL Act ன் படி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்தார்.

6) இது பற்றி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

1) பொதுவாக காவலர்கள் அன்றைய பணி குறித்து கையேட்டில் எழுதி பராமரிக்கவேண்டியது அவசியம் என்று சொன்னால் சரிதான். அந்த கையேடு அந்த மாதத்திற்குள் முடித்து காவல்நிலையத்தில் ஒப்படைத்துவிடுவோம்.

2) மேற்படி முன்விசாரணையில் சொன்ன நிகழ்வுகளை என் கையேட்டில் பதிவு செய்துள்ளேன். இந்த கையேட்டை ஆய்வாளரிடம் கொடுத்தேனா என்றால் இல்லை. உதவி ஆய்வாளரிடம் கொடுத்தேன்.

3) நாங்கள் நடுகடையில் ரோந்து பணியில் இருந்தபோது தகவல் வந்து சென்றோம். திருவையாறு - அரியலூர் ரோடு என்பது போக்குவரத்து அதிகமான பகுதி என்றால் சரிதான். நாங்கள்போகும் போது அந்த இடத்தில் தனிநபர்கள் இருந்தார்களா என்றால் இருந்தார்கள்.

4) அந்த தனி நபர்களை ஆய்வாளர் சாட்சியாக அழைத்தாரா என்றால் அழைத்தார். ஆனால் அவர்கள் யாரும் முன்வரவில்லை. அவ்வாறு யார் யார் முன்வரவில்லை என்று ஆய்வாளர் அவர்களுக்கு அறிப்பு கொடுத்து சட்ட நடவடிக்கை எதுவும் எடுத்தாரா என்றால் இல்லை. அவ்வாறு

தனி நபர்கள் 6,7 நபர்கள் இருந்தார்கள்.

5) அ.சா.ஆ.1 மகஜரில் சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் போட்டேன். சம்பவ இடத்தில் இருந்து காவல்நிலையம் செல்லும்போது மணி மதியம் 13.30 ஆனது. சம்பவ இடத்தில் இருந்து காவல்நிலையம் போனபிறகுதான் இந்த புகார் பதிவு செய்யப்பட்டது என்று சொன்னால் சரிதான்.

6) அ.சா.ஆ.1ல் குற்ற எண் மற்றும் பிரிவு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

7) இந்த வழக்கு சம்பவம் பற்றி காவல்ஆய்வாளர் என்னை இந்த வழக்கு பதிவு செய்தபிறகு என்னை விசாரித்தார்.

8) ஆஜர் எதிரி எங்கள் காவல்நிலையத்திற்கு ஏற்கனவே அறிமுகம் ஆன நபர் என்றால் சரிதான்.

9) நான் முன் விசாரணையில் சொன்னதுபோல் எந்த நிகழ்வும் நடைபெறவில்லை என்றும் காவல்நிலைய புள்ளி விபர கணக்கிற்காக எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தவேண்டும் என்று காவல்நிலையத்தில் எதிரியை வீட்டில் இருந்து அழைத்து வந்து ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கினங்க எதிரி மீது வழக்கு பதிவு செய்து ஆய்வாளர் கேட்டதன் பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை

இல்லை.

/உண்மை நகல்/

ஒம்/P.வேல் முருகன்

முதன்மை மாவட்ட நீதிபதி

தஞ்சாவூர்